**செய்தி வெளியீடு எண்:098** **நாள்: 20.02.2017**

**செய்தி வெளியீடு**

வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடுவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாமினை தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் நடத்தவுள்ளது. இந்த விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாமில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு குறித்த விளக்கங்கள் மற்றும் பதிவு செய்தல் போன்ற விவரங்கள் வேலைநாடுவோருக்கு வழங்கப்படும். தற்போது, சவூதி அரேபியாவிலுள்ள முன்னணி தனியார் மருத்துவமனைகளுக்கு இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 35 வயதிற்குட்பட்ட பிஎஸ்சி அல்லது டிப்ளமோ தேர்ச்சியுடன் சவூதி புரோமெட்ரிக் தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். இப்பணியிடங்களுக்கு தகுதியுள்ளவர்கள் ரூ.980/-க்கான பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி பிரத்யேக விண்ணப்பப் படிவம் பெற்று பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்திற்கு 10–ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் ஏதாவது ஒரு நிறுவனத்தில் இரண்டு வருட பணி அனுபவத்துடன் 22 முதல் 26 வயதிற்குட்பட்ட (இயந்திரம் இயக்குபவர்களாக (Machine Operators) தேவைப்படுகிறார்கள்.அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ரூ.25,000/– வரை ஊதியம், இலவச இருப்பிட வசதி வழங்கப்படும். இப்பதிவு மற்றும் விழிப்புணர்வு முகாமில் இரண்டு வருட பணி அனுபவம் பெற்ற இதர தொழில் பிரிவினரும் கலந்து பயன் பெறலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

எனவே, தகுதியுள்ள இயந்திரம் இயக்குபவர்கள் ஒரிஜினல் பாஸ்போர்ட், சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் நீலநிற பின்னணியில் எடுக்கப்பட்ட ஐந்து புகைப்படத்துடன் திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் (மன்னார்புரம்) 26.2.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.00 மணி முதல் நடைபெறும்

முதற்கட்டத் தேர்விற்கு வருமாறும், பெண் செவிலியர்கள் விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாமில் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப்பெற்று பதிவு செய்து எதிர்கால நிகழ்வுகளில் நடத்தப்பெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், விவரங்களுக்கு 044–22505886/22502267 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**